Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 61 /2019**

**வழக்கு சாட்சி எண். PW6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிகாமணி | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | மாரியப்பன் | தொழில் | : | |
| கிராமம் | : | தருமபுரி | சமயம் | : | |
| தாலுக்கா | : | அரூர் | வயது | : | 63 |

(3, 5 எதிரிகள் ஆஜர். 1, 2, 6 எதிரிகள் ஆஜர் இல்லை. 1, 2, 6 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 4ம் எதிரி இறப்பு).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **15th** Day of **June 2023.**

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று தற்போது தருமபுரியில் வசித்து வருகிறேன். நான் கடந்த 03.02.2016ம் தேதி மொரப்பூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது தருமபுரி அரசு மருத்துவமனையில் இருந்து வந்த தகவலை பெற்று தருமபுரி அரசு மருத்துவமனைக்கு 16 மணிக்கு சென்று அங்கு உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த அசா1 விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து அதன் தன்மைக்கு ஏற்ப மொரப்பூர் காவல் நிலைய குற்ற

எண். 57/2016 சட்ட பிரிவுகள் 147, 294(b), 323, 324, 506(ii) இதச ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அசாஆ 3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1, 2, 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் காயம்பட்ட நபர் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார் என்ற தகவல் எங்கிருந்து வந்தது என்றால் தருமபுரி அரசு மருத்துவமனையில் இருந்து வான் செய்தி மூலம் மதியம் 1 மணிக்கு தகவல் வந்தது. நான் 15 மணிக்கு தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சென்று வாக்குமூலம் பதிவு செய்தேன். வாக்குமூலம் பதிவு செய்ய எவ்வளவு நேரம் ஆனது என்றால் 1 மணி நேரம் ஆனது. காவல் நிலையம் 16 மணிக்கு வந்தேன். அன்றையதினம் 16 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து 24 மணிநேரத்திற்குள் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பவேண்டும் என்றால் சரிதான். ஆனால் இந்த வழக்கில் கண்ட முதல் தகவல் அறிக்கை 3 நாட்கள் கழித்து 06.02.2016ம் தேதி நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கை நான்தான் பதிவு செய்தேன் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் ஒரு கையெழுத்திலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட குறிப்பு மற்றொரு கையெழுத்திலும் உள்ளது என்றால் சரிதான். காயம்பட்ட நபர் தன்னை எதிரிகள் தாக்கியபோது நேரில்பார்த்த நபர்கள் பற்றி குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் முதல் வரியில் இன்று 03.02.2016ம் தேதி இரவு சுமார் 20 மணி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மதியம் 1 மணிக்கு தகவல் வந்த

நிலையில் இரவு 8 மணிவரை எதற்காக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் உயர் அதிகாரிகளின் ஒப்புதலுக்காக காத்திருந்தேன். இரவு 7 மணியளவில் வாக்குமூலம் பதிவு செய்ய உயர் அதிகாரிகளின் ஒப்புதல் எனக்கு கிடைத்தது. நான் தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கையில் புகார் வாக்குமூலம் எந்த தேதியில் எத்தனை மணிக்கு யாரால் பதிவு செய்யப்பட்டது என்ற குறிப்பு இல்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபர் அரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது எங்கள் காவல் நிலையத்திற்கு தகவல் வந்தது என்றும் அதனை நாங்கள் மறைத்து பொய்யான புகாரை பெற்று பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காயம்பட்ட நபர் தன்னை 6 நபர்கள் தாக்கியதாக கூறினார். அவர்கள் பெயர்கள் கையிலைமன்னன், தேவகி, ஜெகதீஷ்வரி, பாஸ்கர், பிரதீஷ், ஆறுமுகம் ஆகியோர்கள் தாக்கியதாக கூறினார். நான் சொன்னவாறு சம்பவம் நடக்கவில்லை என்றும், எதிரிகளுக்கு எதிராக பொய் புகார் அளித்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(5, 6 எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை தழுவிக்கொள்கிறார்கள்).

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**